ஸ்ரீ

கம்பராமாயண

# இலங்கா தகனத்

## திருப்புகழ் காவடிச்சிந்து.



OFFICE ... 17 SEP 1921

மகா-ா-ா-ஸ்ரீ விரகாலூர்

சுப்பையாப்பிள்ளை

அவர்களால் இயற்றியது.

மதுரை வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1921. [அணா 4.

894.8111
2628

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

கம்பராமாயண

# இலங்கா தகனத் திருப்புகழ் காவடிச்சிந்து

விநாயகர் துதி இன்னிசை வெண்பா.

ஐங்கரனே நின் கடமை யாகு மறிவிலே
னிங்குரைசொலுங் கம்பவி ராமா—யணத்துத்
தாதருமி லங்கா தகனத் திருப்புகழுக்
காதரவு தந்தாள் வது

சோமசேகரனருளும் என்ற வர்ணமெட்டு.

ஆனைமுக மானகண நாதா நாதா எனை
யாளவர வேணுங்குண நீதா நீதா (ஆ)

வானவர்க ளுடுமலர்ப் பாதா பாதா இந்த
மானிலமெ லாம்புகழும் போதா போதா தவ
ஞானமுனி வோர்கணவில் வேதா வேதா எந்த
நாளும்பணிக் தேனருள வா தா வா தா (ஆ)

சீதைமண வாளன்மரு கோனே கோனே நல
சேவைதரு வாயடிமை நானே நானே இந்தப்
பேதைமனந் தேறுதனில் லேனே ஏனே ஒரு
பேதகமி லாதுதவு வானே வானே (ஆ)

வஞ்சியுமை யாள்தருங்கு மாரா சூரா தேவி
வல்லபைம கிழ்ந்திடுமொய் யாரா வீரா உனைத்
தஞ்சமெனு மென்முகத்தைப் பாராய் வாராய் இ—
தாசனகப் பைய யன்குறையைத் தீராய் நேராய்

## அனுமார் துதி.

இசைந்த சூலம் என்ற வர்ணமெட்டு.

பிறந்த போது ரவிமிசை யோடிய பெருமானே
பிரிந்த சீதை மகிழுறப் பேசிய குணவானே
அறந்த சில ரகுபதி நாடிய கணவானே
தொடர்ந்த தீய வசுரரி ஞனியை யடுவோனே
இறந்து போமுன் பரதனைக்கூடிய விசையோனே
இலங்கைமான கரையனை லாயெரித் திடுகோனே
பறந்துயேழு கடலையுந் தாவிய அநுமானே
பரிந்துகாரு மிதுதகி யானுன தடியேனே

## ஸ்ரீராமபிரான் கார்காலம் சீதையை நினைத்துப்புலம்பல்.

மன்றுளாடியவா என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

என்று காணுவனோ ஐயோ
என்னருமைக் காதலியை
பின்னைவரு சானகியை (என்)

### சரணங்கள்.

அன்றுமானைப் — பிடித்துத் தரச்சொல
ஆவதறியா ததன்பிறகே செல
இன்றுவாடி யிரங்கினனே நல
ஏதுகனி வாதையினி
மாதரசி சீதைதனை (என்)

தம்பிவார்த்தை தடுத்துநடந்தேனே
தாபமடைந்து தவித்துமெலிந்தேனே
வம்புவருமென் றறியாதலைந்தேனே
வஞ்சமிஞ்சு நெஞ்சரக்க
ரின் சதிக்கு ளஞ்சுமின்னை (என்)

வந்தமானைத் தொடர்ந்ததறிந்தானோ
மாதுதனித்து வருந்தத் தெரிந்தானோ
இந்தமாய மிருந்து புரிந்தானோ
இலங்கையிலன் குலங்களறக்
கலங்கிடவதைத் தலங்கிர்தமினை (என்)

மதிப்பெல்லாம் போச்சுது என்ற வர்ணமெட்டு.

கண்மணி சீதையே உன்னைப்பிரிந்து நான்
கானகத்திருப்பேனோ கண்மணி கண்மணி க க
மானைப்பிடிக்கப்போ யீனமுமாகினேன்
வாழ்வேனோதனிமையாய் கண்மணி க க க
என்றுனைக்காணுவே னென் மனந்தேறுவேன்
எங்கித்தவிக்கிறேனே கண்மணி க க க
வண்டனிராவணனைக் கண்டுபயந்தாயோ
மாபாவியாகினேனே கண்மணி க க க

## ஸ்ரீராமரை லட்சுமணர் தேற்றுதல்.

அச்சாமோரிலாகீஜே என்ற வர்ணமெட்டு.

அண்ணாகுமாரா நீ யாவிசோர லாகுமா
சோர லாகுமா ஆகுமா ஆகுமா (அண்)
மண்ணுடையோத்தினகர் மன்னர்கு லாதிபனே
எண்ணாத மெண்ணியிங் கேங்குறுயென்பலனே (அண்)
ஆதாரமானவனே ஆதிமூலாதரனே
சீதாதேவிக்கேதுந் தீங்குறுதாதவனே (அண்)
கோதண்டங் கையிருக்கக் கோடியில் அம்பிருக்கத்
தீதண்டு மோலங்கைத் தீயார் கருவருக்க (அண்)
உன்மகிமையறியாய் ஓதாவிடில் தெரியாய்
தர்மமோ சாமிநீ தாபங்கொண் டால்சரியா (அண்)

## சுக்ரீவன் வராதது பற்றி ஸ்ரீராமர் கோபித்தல்.

மகாவசூர பத்மன் என்ற வர்ணமெட்டு.

வாராததேனோ தம்பி மாயசுக்ரீவன் (வாரா)
பாராமுகஞ் செய்தானடுத்துப் பாசமிதுதானோ
பாவி ராமனுகு மென்று பகைத்தானோ என்ன
பாவித்தானோ
பகர்ந்த சத்திய மறந்து விட்டவன்
உகந்த பத்தியைத் துறந்து கெட்டவன் (வாரா)

விநோதமாகுமிது வேடிக்கைதானோ-விநோத
அநாதரட்சகாஉனைநா னண்டினேனென்றோனே
அன்றுவாலியாவி போக்கி யளித்தேனே-முகம்
விழித்தேனே

அறிவுகெட்டோர்று நினைவுதப்பிய
மிருகபத்தியைத் தெரியவைத்து (வா)

## ஸ்ரீராமர் கோபத்தை லட்சுமணர் தணித்தல்.

கண்டேனனந்தங் கொண்டேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அண்ணாயே னிந்தக் கோபமே எந்தன்
அண்ணாயே னிந்தக் கோபமே

அநுபல்லவி.

இன்னுமிடமரை நொடியெனும் போதவனை
வரவழைத்திடு வேனுனதிடம் (அண்)

சரணம்.

கொண்டசினத்தை யொழிப்பது பத்தியம்
கோருஞ் சுக்கிரீவன் வருவானசத்தியம்
வண்டனரக்கனைக் கொல்லுவோம் சத்தியம்

மாதருக்கர சானவனிதை
சீதையைப்பெறு வோமவனியில் (அண்)

முந்தவுரைத்த மொழியுந்தவறிடான்
மோசம்புரியா னவனுமிகநலான்
எந்தவிதத்திலும் நட்பைவிரும்புவான்

இக்கணமனு கிடுவானம்மை
சுக்கிரீவனும் பணிவானிமை (அண்)

## சுக்ரீவன் ஸ்ரீராமபிரானைப் பணிதல்.

பத்திசாதிக்கவிடாது என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ராமாவுன் பாதநமஸ் காரம் எனை
ரச்சித்தருளுவதும் பாரம் ஸ்ரீ (ராமா)

அநுபல்லவி.

பூமாதிருந் துவக்கு நேமாமுருகனுக்கு
மாமாவருமனந்த நாமாவயோத்திராகு (ராமா)

சரணம்.

சின்னஞ்சிறு குரங்கு நானே ஐயோ
நியமதவருந்தி னேனே
சொன்ன சொல்லைமறந் திட்டேனே மெத்தச்
சோர்வதனையடைந்து ளேனே
உன்னை வினைத்தலிலா லோபிப் பயலானேன்
என்னைக்கோபிக்கிலெங் கேகுவேனெங்கோனே (ராமா)

## அனுமார் கடல் தாண்டல்.

ஓதிருநெல்லூர் என்ற வர்ணமெட்டு.

அட்டதிக்குப் பாலகரும் வாட-எட்டு
யானைகளும் வீறிட்டருந் தோட-தேவ
ரானவரும் வானவரும் பாட-இந்த
அலைகடலினை யொருநொடிதனி
னலமொடுகடந் திடுவதுமெனக்
கருமையில் பெருமைவருங் கூட இதற்
கஞ்சுவனோ நெஞ்சுநகை யாட (அட்)

தென்னிலங்கை தன்னையடை வேனே - அந்தத்
தீக்குணத்து ராக்கதரை யானே- கொன்று
தேவியிட மேவிடவல் லேனே- சொன்ன
சேதித்தனை யோதிப்பிர
மாதத்தனி வேகத்தொடு
தீவிரம தாவ்ருவ னேனே எதுந்
தீமையற ராமனிடந் தானேன் (அட்)

## அனுமார் இலங்கையில் சீதையைத் தேடுதல்.

ரேகுநாலேநாலே என்ற வர்ணமெட்டு.

தனி தேடித்தேடி நானலைந்தே னினுந்திருமகள் சீதா
தேவியைக்காணேன் (தனி தேடி)

சரணம்.

ஓடியோடி ஒவ்வோரிடமு முப்பரிகைக் கோயிலும்
ஒங்குமாட மாளிகையு மோசையுற்ற வாயிலும் (தனி தேடி)

வேத மோதா சாவடியும் வீடுதோறுஞ் சோலையும
வீதிசந்து பொந்தினோடு மேனுடன. சாலையும் (தனி)
இலங்கை நகரெங்குந்தேடி யேபதங்கள் நோகுதே
என்றுகாணுவோமோவென்று எந்தனுள்ளம்வேகுதே (தனி)

## அனுமார் ராவணனைக்கண்டு கோபித்தல்.

நாரணத்தவனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

ராவணனிவனோ லங்கை
ராச்சியத்தவனோ வரு
ராகவன் மனை யாளைவவ்விய
சேவகனிவனோ மிக
மாவலனிவனோ தீய
ராட்சதகுல மூச்சடங்கிட
வாச்சவனிவனோ கன
நீச்சனுமிவனோ ஒரு
ராமன்கைக்கணை யாலிறந்திடு
நாயகனிவனோ வசை
தீயகனிவனோ புவி
ராசருந்தவ நேசருமுயர்
தேவருந்தொழ வேவரும்புக
ழாயிருந்தவ னுமிவன்றனை
நானறிந்துசு மாவகன்றிடல்
ஞாயமதல வேகணந்தனி
னைசமூந்திட வாழ்வழிந்திட
வானகம்புக வேயனுப்புவேன் (ரா)

## அனுமார் இலங்கையில் சீதையைத்தேடி வருந்துதல்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற மெட்டு.

இந்தஇலங் காபுரி யெங்கும்-இடைநுழையா-விடமுமடைந்
தின்று தேடினேனே தியங்கும்-படி
இன்னுங்காணில னென்னைசீதையை
என்ன நானினி செய்குவேனுன

மேன்கித்தனித்தேன னுமனே-இரவிகுல-ரகுபதிக்கு
பானுமாவனேவுந் தமனே
சொன்னகெடு வான தொல்லையே இலங்கைதனி-லலைந்ததினல்
சொற்ப பயனேது மில்லையே-மடத்
திட்டராவணன் பட்டுமாளவும்
வட்டமாநகர் மட்டமாகவுஞ்
சுற்றியழிக் காதகல் வேனே சனகியனை-இல்லையெனவுஞ்
சுவாமியிடத்திற் புகல்வேனே

## அனுமார் சீதையைக்காணுதல்.

### கண்ணாயிரம்படைத்த என்றமெட்டு.

கண்டேனானந்தமெத்தக் கொண்டேனடைந்தவர்க்குக்
கருணையழித்திடு திருமகளைக்கண் ணிங்கையே -மனக்
கவலையொழித்திட தடையெனவிட்டது சங்கையே
விண்ணோரகங்களிக்க மண்ணோரலந்துடைக்க
விமலதவத்தின ரவசமிகுத்திட முன்னிலே -மன
மெலிதருபின்னையை யருகுமரத்தடி தன்னிலே
பொல்லாவிலங்கையுற்ற வல்லானரக்கனுக்குப்
பொருதியமைச்சிர மொருபதுமண்ணிடை வீழவே -செய
புகழுறுநன்னய மிதிலையினன்னையும் வாழவே

## இலங்கையில் சீதாதேவி வருந்துதல்.

### வங்காரமார்பிலணி என்ற வர்ணமெட்டு.

சண்டாளி யாகுமெனைப் போலுமொரு மாதரினை
யுண்டோவு லோகமதி னுசமுற ராவணனுஞ்
சல்லாப மானமொழி பேசியெனை யேசிநிதந் -தவறுது
பெண்டாள வேகருது ரானவதிப் பாடனுகித்
திண்டாடி யீதுசிறை வாழவிதி யானதென
பெண்ணாயி னேருரிய நாதனைய லாதுதனித்-திடுவாரோ
கொண்டாடு ராமனெனை யாள்கதியைப் பாருமென
விண்டாருங் கூடிநகை யாடவெடுத் தேனுடலம்
குன்றுனி யாகுலம தேகிடக ளுளனையென்-றடைவேனே
கண்டான மாகொழுந்த னேதுமுறை மீறியதி
லுண்டான தீமைபிடி தாரையினி னோவதோவென்
கற்பான தீயிலிலங் காபுரியெ லாமழிய-வெரியாதோ

என்னவிதிவிட்டனையோ என்ற வர்ணமெட்டு.

இந்தக்கதிவிட்டனையோ விதியோ-ஐயோ
ஏங்கித்தியங்குகிறேன் பாங்கிமயங்குகிறேன் (இ)

சொந்தமணவாளனையு மற்றேன்-தெய்வ
சோதனையோஎவர் சாதனையோயிது (இ)

என்னை மறந்திட்டனரோ கணவன்-இனி
ஏதுநான்செய்குவேன் மாதெவ்வாறுய்குவேன் (இ)

பத்துத்தலை சிந்திடவே பாவி-கணை
பட்டுமடியானே கெட்டு முடியானே (இ)

கொண்டமனையாட்டி மண்டோதரி-மிக்க
கூவிப்புலம்பிடப் பாவிநான் பார்ப்பேனே (இ)

என்றுசிறை விட்டொழிவேனே-ஐயோ
யாரும்பழிக்கவே பாரிற்பிறந்தேனே (இ)

## சீதாதேவிக்குத் திரிசடை கனுநிலையுரைத்தல்.

நடந்ததென்ன சொல்லம்மா என்ற மெட்டு.

### பல்லவி.

கனவு கண்டேனம்மா இதை
நினைவென்று சொல்ல லாகுமோசும்மா (க)

### சரணங்கள்.

வனிதை மண்டோதரி கூவி முடக்கவும்
வடியரக்கர்பி ரேதங்கடக்கவும்
இனிமையாய்ப் பேய்க்கணந் தின்னத்தொடக்கவும்
இராவணன் நெய்த்தலை யோடுநடக்கவும் (க)

மாலைகள் வாடவும் மாளிகை சாயவும்
வானையளாவிய வாலயந்தீயவும்
ஓலமிட்டரக்கிய ரோடியுட்டேயவும்
உலகமெல்லா மிரு ளாகவும் யாவும் (க)

மன்னனிராவணன் வாழ்மனை விடுத்து
மங்கை யொருத்தியெந் தங்கையிலடுத்தி

கன்னயமாய்வசித் தானினி தடுத்து
நானிவ்வரண்மனை தன்னிற்படுத்தி (௫)

## சீதாதேவி பக்கல் ராவணன் குறையிரத்தல்.

சோமசேகரனருளும் என்ற வர்ணமெட்டு.

காதலியே உன்னைநம்பி னேனே நானே என்னைக்
கைவிடத்தகாதடிசெந் தேனே மானே (காதலி)

மாதாசியின் இம்மனம் வல்லியோடி இந்த
மன்னனைக்கண்டா லுனக்குத் தொல்லையோடி ஐயோ
பூதலய யுந்தனுக்கு மில்லையில்லை சர்வ
பேர்களுமுண்டாருமேயிவ் வெல்லைவெல்லை (காதலி)

வாதிங்கெந்தன் மீதுபகல் தாபம் தாபம் இனி
வர்மமொழித்தே இருக்க லாபம் லாபம் (காதலி)

காணக்கிடையாத மட மாதே மாதே உனைக்
கண்டுமகிழ்ந்தேனடியிப் போதே போதே இன்னும்
நாணமென விட்டுவிடாய் சூதே சூதே லங்கை
நாயகனைக் கூடத்தடை யேதே ஏதே (காதலி)

## சீதாதேவி ராவணனைக் கோபிக்கின்றாள்.

வேலனேயிந்த வீணனையேன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஞாயமா துட்ட ராவணனே மடையா அந்த
ரகுநாயகன் கணையா லுயிர்
விடுவாயினி கெடுவாயடா (ஞாய)

அநுபல்லவி.

மாயமதாய்வந்தே மாற்றினையெனை
மாரீசனுக்கொரு எமனுமாயினை
மரியாதையு மலவேஇது
சரியோபழி தெரிவாயடா (ஞாய)

சரணங்கள்.

உன்னாசட்டு முழுதுங்கலையவே
உள்ளகவுரவ மெல்லாந்தொலையவே
கன்னிமண்டோதரி கண்ணீர்சொரியவே

கழு காடிட — புழு வேர்டிட
பழுதாயிட — விழுவாய் [illegible] (ஞாய)

மூன்றுமூர்த்திக்கும்நான் முன்னெனச்சொல்லுருய்
மூடப்புத்திமிகுந் — தேயுனைக்கொல்லுருய்
வான்றுணையோடுமின் — வாழ்வினைக்செல்லுருய்

மறுமாதரை — நினைவாயெனி
லுறுவாயெரி — நரகேயட (ஞாய)

வாயில்வந்ததெல்லாம் — வம்பாசப்பேசுருய்
வல்லவனென் றுகை — வாகுடன் வீசுருய்
நாய்போல்குலைத்துமென் — றுதனையேசுருய்

நலமோடனைக் — கலமேவரும்
பலமேதுஉன் — குலமேகெடும் (ஞாய)

# இராவணன் தர்க்கம்.

பஹாரி மேரிப்யாரி என்றமெட்டு.

ஏதுனைதுயி — ரினிக்கணமேனும் — நில்லா
திசைவாய் இசைவாய் இசைவாய் இசைவாய்
இலையெனிலுனைக் — கொலைபுரி வேன்
தலைவிதிவச — மெனவறியடி (ஏது)

## இராவணன் தர்க்கம்.

மலடிவயிற்று மகன்போலே என்றமெட்டு.

இரா— மனதில்நினைத்தென்கலிதீராய் உறு
விதனமனைத்து மொழிசீராய் இனி
மனதுகளித்து எனைப்பாராய் அடி—பினிநேராய்

சீதை— உருவைப்படைத்த பரனேனோ உனக்
கறிவைப்படைக்க விலையேனோ இது
உடலையடுத்த பிணிதானோ விலை—மகள்நானோ

இரா— மதியைநிகர்த்த முகமானே ரகு
பதியை நினைப்ப தினியேனோ யந்த
மனிதரெனக்குப் பகைதானே வதைப்—பவனானே

## இராவணன் சீதை தர்க்கம்.

எனை யாண்டவா ஆடுந்தில்லை என்ற மெட்டு.

சீதை— அடாராவணா ராட்சதசிம் மாசனா
ரணபேரிகை யிடுமாகளந்
தனிலாணவம் தெளிவாய்மட (ரா)

இரா— அடி சீதையே தீராய்மன வாதையே
சினத்தைவிடுத்து சிறப்பையடுத்து
மனத்தைக்கொடுத்து சலிப்பைக்கெடுத்து (சீதை)

சீதை— பாவவழியென்று பதமுடனோதியுமெனப்
பயலே பயலே பயலே பயலே
பதைத்திடமொழி யுரைத்தனையுனை
வதைத்திடவருங் கருத்தனெனினை (ரா)

அமரக பியாரி என்ற மெட்டு.

உலாசசுகமானே ஓடிவருவாய்தேனே (உலா)
சலாபக்காரி சமயவொய்யாரி
சந்தோஷமாய் நீ வா வா (உலா)

சீதை— இராவணனே போடா நாசமடைவாயடா (இரா)
பாவி நீ யென்னைப் பாராதேசொன்னேன்
பாவஞ்சுமக்காதேடா போ போ (இரா)

இரா— பராமுகஞ்செய்யாதே பாவமுனக்குமாதே (பரா)
தராதலமீதே சாதித்திடாதே
சாலந்தகாதிப்போதே வா வா (உலா)

சீதை— அடாதுனக்கிவ்வாது ஆகாதடைவாய்தீது (அடா)
பாடாதபாடு பட்டுநீசாவாய்
பல்லைக்காட்டாதே போடா சீ சீ (இரா)

மலடி வயிற்று என்ற மெட்டு.

சீதை— அரசையிழக்க நினையாதே-பத்து
சிரசையொழிக்க முனையாதே-தின
மரியபலத்தைப் புனையாதே-மன—மினையாதே

இரா— அமுதமொழிக்கண் மணிமாதே-எந்தன்
சமுகமிருக்க வெனவாதே-யென
தரசையசைக்க முடியாதே-விடு—விடுகுதே

சீதை— வலியபலகமெனன் டவனோடா-மன
நலியசலங்கித் திர்மூடா-இனி
அழியுமிலங்கைச் சுடுகாடா-யிடு—மறிபோடா

நந்தவனச்சிங்காரமே என்ற வர்ணமெட்டு.

இரா—கட்டழகியிக்காலமே கண்ணாட்டியே என்சாலமே
கிட்டிநின்றுலிப்போதே சேவலமாமோ மாதே
கேலிக்கிடமிது வாகுமறிந்திடு
நீலித்தனமுத வாதுயெனோடு (கட்)

சீதை—என்னோடிவசதிடனாயமா ஏற்காதுசம்பிரதாயமா
சின்னப்படாதே யோசி செல்வாயப்புறந்தோசி
சீசியுனக்கென ரோசமில்லையில்லை
பேசியுடன்படு தாசியல (என்)

இரா—தையலே இஃதன்னிதமே தகாதினும் பிடிவாதமே
ஐயோயெனக்குப் பிரமாதமே வையாதிருமனக்ரோதமே
நையுதென்மனம்பாவி செய்யாதே வாதைமேனி
ஞானவிதந்தன பாக்கியவதியென
மானேயரண்மனை மேலிருப்பாயே (கட்)

சீதை—புத்தியில்லாமுழுப் பேதையே நீபோவது மரியாதையே
உத்தமப்பத்தினி மாதையே உன்னுதிருப்பது மேதையே
சித்தஞ்சுப்பிபயின்பாட்டு நேர்மையுடனே கேட்டு
நீதமிலாமொழி யோதுகிறாயடா
காதகனேயவ தாறுமிருந்து (என்)

## சீதாதேவி தனியே புலம்புதல்.

செந்தின்மாநகரந்தனில் மேவிய என்ற மெட்டு.

தெய்வமேயென்ன செய்குவேன்மனந்
தேறிடவோவழி காணேன் தூய
ராறிடவோகலந் தோணேன் நிகர்
இட்டுதட்ட வரக்கிமாரிவைவ்
கட்டுப்பட்டுமி ருக்கவோ விதி
திக்குவேறிலை சக்கிரவர்த்தியின்
சேயனைநாதனுள் ளாரோ என்ற
னேயமெல்லாமறந் தாரோ

சொந்தவீட்டிலி ருந்திடுவாயெனச்
சொன்ன சுவாமியை நோகச் சொல்லி
யின்னலடைந்தேனே வேக பல
தொந்தமுண்டிட வந்த தீவினைக்
கிந்தலங்கையி ருந்துமாசிறை
துக்க மேவித்த விக்குறேனே எவர்
சோதனையோவிது தானே என்று
நாதனைக்காணுவே னோனே

ஆபரணங்கள் கண்டேன் என்ற மெட்டு.

பாதகி யென்ன செய்வேன் - இந்தப்
பாரிலெவ்வண்ண முய்வேன் (பாத)

வேதபுராணமெல்லாம் வேண்டுமகா னுபாவா
விமலநாதனே அமலபோதனே கமலபாதனே ஐயோ (பாத)

கொடியதாடகைப்பாவி மடியவாளிதொடுத்த
கோலராகவா சீலமாதவா காலமிதுவே ஐயோ (பாத)

மாபாவி பெண்பிறந்து மணவாளனையிழந்து
வாழ்வதுமேனோ ஊழ்வினைதானோ தாழ்வறியேனோ ஐயோ (பாத)

## சீதாதேவி அனுமானை வினவுதல்;

பாசப்தம்போலே என்ற மெட்டு.

இங்குவந்து நிற்பவனீ யாரடாசொல்லு - உன்
பேரென்ன நில்லு நீ
இட்சணமென நச்சமகலப் பட்சமதுடனே (இங்)

அனு— சோதிரகு ராமன் விடு
தூதனுனம்மா அனு
மானென்பேரம்மா தனி
சொன்னசேதி தன்னையோத அன்னையேவந்தேன் (சோ)

சீதை— ஓ கொடிய ராவணனே
உருகுதேநெஞ்சம் இனி
பெருகுதேவஞ்சம் தனி
உள்ளசேதி விள்ளுவாயிக் கள்ளமேனடா (இங்)

அனு— நாதன் விடு தூதனம்மா
ராவணனல்ல வஞ்ச
மாவனுமல்ல இங்கு
நத்திவந்தேன் சத்தியமே சித்தமகிழ்வாய் (சோ)

## அனுமார் ஸ்ரீராமரை வர்ணித்தல்.

வெள்ளிமலையோத்தபலமேடை என்ற மெட்டு.

சுந்தர மிகுந்தபரந் தாமன் எனைத்
தூதனுயனுப்பியஸ்ரீ ராமன் எனுஞ்
சோதிமணி ரூபமடி யெனவிலக் கேளுமினி
நீயே அம்மா தாயே

கந்தவர விந்தமிரு காலும் அவர்
காந்தியுடல் மாந்தளிரைப் போலும் நல
கருணையொ ழுகுகின்ற விழியும முகிருந்த
வேலே புவி மேலே

சீதளமதிக்குநிக ராயே உறுஞ்
செவ்வியமுகம்பவள வாயே திடஞ்
சேருமணி யாருபுய மேருவினை நேருமென
நாயே யுரைப் பேனே

ஆனிலையைப் போலவயி றுமே இந்த
அண்டங்களை யுண்டவாய ணுமே நல்லி
அமுதமொழி கழுத்து சமுகமென வழுத்து
வாரே புல வோரே

செங்கையிலி லங்கியது தனுசே அவர்
சிலமும்பெருமையுமோர் தினுசே விரி
செண்டுமலர்த் தண்டுவளங் கொண்டமுடி கண்டுமகிழ்
வார்கள் இமை யோர்கள்

மன்மதனுங் கண்டுமனம் வெருவ பல
மாதர்களுங் காதலொடு மருவ நிலை
வடிவமுடைய வண்ண லடிமைமனதி லெண்ண
நாளும் வினை மாளும்

## இசைந்த சூலம் என்ற வர்ணமெட்டு.

பரந்த மார்பன் தவவடிவாயுறு பரிபாலன்
பணிந்த பேரி னவமொடுபாதக மடுமாயன்
சுரந்த தான கருணையுலாவிய விழியாளன்
சுகந்த வாடை மரவுரிமேவிய சுகுணேசன்
கரந்த நீதி நெறியறிவோனருங் கதியாளன்
கணிந்த சீல னிளையவரோடுறு மிளங்கேகன்
புரந்த ராதி தொழுமொருநாயக னரிராமன்
பொலிந்த நூல னிடவடையாளமி தறிதாயே

## சீதாதேவி கணையாழியைத் தரிசித்தல்.

### கண்மணியே பெண்மணியே என்ற மெட்டு.

என்னருமை நாதனணி கின்றகணை யாழிகண்டேன்
கன்னிகையான் சின்னமறக் கண்ணதனிலொற்றிக்கொண்டேன்
இன்றமுத லென்றுயர மெல்லாமொழிந் திட்டனவே
சென்றினியென் மன்னனொடுஞ் சேரும்பதங் கிட்டினவே
ஆழிதனைக் கண்டதுபோ லாளனையுங் காணுவேனோ
வாழியவர் பாதமதை மாதலையிற் பூணுவேனோ

## சீதாதேவி அனுமாரிடம் உரைத்தல்.

பாலைவாய்க்கமுகில் என்ற மெட்டு.

சாமிரகு ராமரிடம் நேயமுட னீயணுகிச்
சாற்றிடுமிவ்வார்த்தைதனைச் சொல்லுவாய்-இந்தக்
கூற்றுவனிலங்கைவிட்டுச் செல்லுவாய்

ஜானகிரா மாமிருக சீவனஞ்செய்தே யிலங்கை
தன்னிலுறைகின்றனளென் றோதுவாய்-எந்தன்
மன்ன னிராமன்விடுத்த தூதுவா

திட்டனரயழிக்கும்பலங்கெட்டதோஉந்தனுக்கென்று
தோகையும் வினவியதாய்க் கேளுமே-முன்னம்
காமனையளித்த பலம் மீளுமே

கேவலக்குணம்படைத்த ராவணன்தனக்கும் பலங்
கீழடைந்ததோ வெனவுங் கேளுநீ-இங்கு
பாழடைந்த சீதையென்னை யாளுநீ

ஈனமணுகாதவனு மானேயினி தாயளிக்கு
மித்திருசூடாமணிகொண் டேகுவாய்-கையிற்
பத்தினியளித்ததென்றே ஈகுவாய்

நாளுமுந்த னல்வரவெவ் வேளையுமுமோவெனவு
நானிருப்பதாயுரைக்க வேணுமே-லங்கைக்
கோனிறக்கமாயஞ்சொலத் தோணுமே.

## அனுமார் அசோகவனத்தை அழித்தல்.

அட்டதிக்கினிலும் என்ற வர்ணமெட்டு.

இந்தவசோக வனத்தையழித்திடு வேனே
எங்குமோதுமொரு துங்கவனுமந்த னேனே
அந்தவி ராவணன் கண்டேகிலேசித்
தயரக்கன துயரத்தொடு
மயலுற்றொரு செயலுற்றிட (இந்த)

கந்தமிகித்திடுஞ் சந்தனமாமரங் காய-இங்கு
கண்டபலாமரந் துண்டமதாயடி சாய
மந்தகாசமிக வாகமராமரா
மரமெங்கிலு மறவிங்கித
தரமுங்கெட சிரமுங்கொடு (இந்த)

நெட்டைமரமெல்லாந் தொட்டுமுறித்திடு மோசை-கேட்டு
நெஞ்சமருண்டிட விஞ்சையுளோர்கொள வாசை
துட்டவரக்கர்கள் வெட்டும்கட்டுமென்றே

சூழக்கனி வீழக்கொடி
தாழத்திரு வாழத்தனி (இந்த)

மாடங்களுங்கட்டுக் கூடங்களுங்கெட்டுப் போக இந்த
மானலங்காபுரிக் கோட்டையிதிற்பொடியாக
கூடங்குலேந்திட வீடுங்கலேந்திடக்
குறிப்பேனற முறிப்பேனுயிர்
பறிப்பேனுடல் தறிப்பேனினி (இந்த)

## அனுமாரை இந்திரஜித்து எதிர்த்தல்.

வந்தின்பந் தருவாய் என்ற மெட்டு.

இந்—துற்புத்திக் குரங்கே இவ்வ
சோகவனமெல்லாம் நாசமாக்கிவிட்ட (துற்)

அனு—ராட்சதப் பயலே உந்தன்
ராணுவ வீரமு மாணுவமுமிதோ (ரா)
அண்டரண்டம்புகழ் கொண்டவனுமென்
அண்டையினில் வந்த சண்டாளா அடா (ரா)

இந்—சீ துடுக்காவுனக் கடுக்காதிது
விடுக்கேனுனே யடுக்காதடா (துற்)

அனு—அந்த ரகுநாயகன் விடுதூதனே
லகுவாய்விணைந் தனேயோமட (ரா)

இந்—அட தூதெனமேவிய சூதுள
காதக னேமடி வாயினி (துற்)

அனு—எங்கள் ராகவனுனுயிர் போகுமு
னேகெடுவாயெனத் தோணுது (ரா)

இந்—அட துட்டனுமானஉன் கொட்டமெலாமறக்
கட்டிடுவேனுனே வெட்டிடுவேனறி (துற்)

அனு—கன ரத்தமிக் கெழுப்பிடித்துக்
குத்திடத் தனித்திடுவை (ரா)

இந்—வெகு சூரத்தனமுனை வீரத்தனவஞ்ச
தீரத்தனுவினே யீரத்தெரிகுவேன் (துற்)

அனு—அட ராவணன் தலைமகனு மானஉனது சமர்த்தும்
காவனக்குரங்கினிட மாவலமையுமறிவோம் (ரா)

இந்—உன் தொண்டையைக் கிழித்திடுவேன்
மண்டையை உடைத்திடுவேன் (துற்)

அனு— அட பித்தாவங்தெதிர் மத்தாஇந்திர
சித்தாநொந்தழி யித்தாலந்தனில் (ரா)

இங்— சீ எதுக்கினி வாதுச்சண
போதுக்கு நிலாதுன் னுயிர் (தற்)

அனு— தூ படுவா வஞ்சினங் தொடுவாயுந்திடக்
கெடுவாய்எந்தனை யடுவாவிங்சனம் (ரா)

இங்— தற்செயலால்தம்பி யட்சயனைக்கொன்றாய்
சோரத்தன அதி காரத்துட னின்றாய்
அச்சமெலாம்விடுத் துச்சின மாகின்றாய்
யாவரையுமழித் தேகிடுவேனென்றாய் (தற்)

அனு— ராமனெடுங் கணையாலே
ராச்சியமு மழிகாலே
மாவனிய பகையாலே
மாண்டிடுவா யினிமேலே (ரா)

இங்— எனதுட பலமறிந்து வசனி

அனு— உனதுடன்பல மொழிந்திடுமினி

இங்— இனமெதுக்குரை யிறங்தொழிதனி

அனு— தினகரனெழ வழிந்திடும்பனி (ரா)

## அனுமார் பிர்மாஸ்திரத்தால் கட்டுண்டல்.

நாதாங்கு கைஜா என்ற மெட்டு.

இங்—பேசாதே வாகுரங்கே
பிர்மாஸ்திரத்தாற் பிடித்தே னடித்தேன் (பே)

அனு—வீசாதே இந்த்ர ஜித்தே
விருதாமொழியேன் விடடா அடடா (வீசா)

இங்—ஏசுராயா ஜுவ பின்னமுமேனடா
நீசக்குரங்கேயுன் நெஞ்சழுத்தமோடா (பே)

அனு—செயித்தவன்போலவே தாண்டுறாய் மேலேயே
பயித்தியமோவின்னும் பாராயென் வேலேயே (வீசா)

இங்—ஏதடா தகாதடா தகாதடா எதிர்ப்பதுமிங் கேனடா

அனு—வீணனே பதருதடா பதருதடா வீம்பிது பலிக்காதடா
இந்— உதைப்பேன்
அனு— வதைப்பேன்
இந்— துட்டனே
அனு— கெட்டாய் நீ (வீசா)

## அனுமாரை ராவணன் வினவுதல்.

ஆரேசையா என்ற மெட்டு.

ஆரடாநீ குரங்கே இங்கு வந்தாய்
அடாவுன் பேர் யாது (ஆர)

பாரடா வாழுவது மெவ்வூரு
தீரமாய் மேவிய தென்னசிரு
பாதகமாய் மேவி
பசாசெனவுந்தாவி
பழித்தனையே செழித்தனையே விழித்தனையே அழித்தனையே (ஆ)

சண்டனைப்போலவே வெகுவீரம்
கொண்டனையீ தென்னவதிகாரம்
சம்புமாலி மாள
வெப்பியசேனை மீள
சமரமிகுந்திறமைமயென சமுகமதிலமர்வதென (ஆ)

## அனுமார் ராவணனுக்கு விடைகூறுதல்.

ஐமூலகுதரத் என்ற மெட்டு.

ராமசாமி தூதனறிவாயடா அடா அடா . (ராம)
ராவணனே பிணை
ராட்சதனேயெந்தன் பேரனுமானடா அடா அடா (ராம)

பாதகா காதகா பட்டியே சுட்டியே
பதறாதே கதறாதே
பத்துத் தலையாலே கத்துகிறாயடா அடா அடா (ராம)

மத்தனே பித்தனே வஞ்சமேவு நெஞ்சனே
மடையனே கடையனே
வாலிட்டிங்குன்னிலு மேலிட்டுளேனடா அடா அடா (ராம)

மகாமாயக்காரி என்ற மெட்டு.

இரா:—அடா அனுமானே யறிகுவேனுனே (அடா)
அடா தனக்கிதேயறி (அடா)
தடபுடலாகச் சாற்றுகின்றாய் நோக (அடா)
அனு:—சமர்த்தையறிவாயோடா போ போ
இரா:—தடுத்துப் பேசாதே (அடா)
அனு:—சூதாகத்தாயைத் தூக்கிவந்தாயே
இரா:—சுருக்குன்வாலைக் காட்டாதே சீ சீ
அனு:—துடித்து விழாதே (அடா)
இரா:—மூட வானரமே
அனு:—மூர்க்கா பத்திரமே
இரா:—முறுக்குச் செல்லாதே இங்கே
அனு:— ஆ ஆ (அடா)
இரா:—முனைந்து நில்லாதே
அனு:—வீணாய் நீ கெட்டு விழாதடா பட்டு
இரா:—வெருட்டுகிறாயோடா சீ போ போ
அனு:—விதி முடிவாச்சோ (அடா)

## அனுமார் இராவணனுக்கு மதி கூறுதல்.

வீரராவண சம்மார என்ற மெட்டு.

அட ராவண சண்டாளா திண்டோளா கேளாய்-லங்கை
ராச்சியமழிந்துபோகும் நாளாய் வாழாய் (ராவ)

அநுபல்லவி.

தேவர்புகழுஞ்சீதா தேவிதனைக் கொணர்ந்தாய்
சாவதினை, வெடுத்தே பாவவழி யுகந்தாய் (ராவ)

சரணங்கள்.

அண்டர் துயரந்தீர ஆதிமூலதேவன் கருங்
கொண்டல்வண்ணனான பகானுபாவன்
மண்டலமீதுவந்தார் வள்ளலிராகவனாய்
வையமிசை நைகுராயாதி உய்யடா மேவி பாவி (ராவ)

வேதமுணர்ந்து விழைத்தாய்நீதே மடையா
சாபமிருந்து தவித்திடாதே
சீதாமாதாவைவிட்டுச் சீக்கிரமாகப் பிழை
செல்லாதுவாது பொல்லாதகுது நில்லாதுன்வாழ்வு (ராவ)

காலமும்பலமும் அறிந்தாயில்லை தனைய
சீலமும்நலமுந் தெரிந்தாயில்லை
ஞாலமீதையன்பதம் நண்ணுவாய் தஞ்சமென்று
நாடியோடுவாய் தேடிக்கூடுவாய் பாடியாடுவாய் (ராவ)

ஐசாபர்ஞ என்ற மெட்டு.

இரா:— என்னசொன்னாய் முன்னே நின்றே
என்னாமல் நீ யெந்தனையே
சின்னபின்ன மாகக்கொண்டு
மாண்டிடாதே நிந்தனையே

அனு:— மன்னுலங்கை வாழ்வைவிட்டு
மாண்டிடாதே நிந்தனையே

இரா:— கொன்னிக்கொன்னிப் பேசிப் பேசிக்
கோபமூட்டு கின்றனையே

அனு:— கோபமேதடா மனஸ் தர்பமேதடாபல
பாபமீதடா என சாபமோவடா

இரா:— திருடா நிறுத்து சீ சீ சீ

அனு:— அடடா அழிந்து போ போ போ (என்)

## அனுமார் இராவணனை இழித்தல்.

திலயாரயார என்ற மெட்டு.

வீர சூரன் நானென்றே
மெச்சிக் கொளாதே மகா (வீர)
தீரன்நீயாயிருந்தால் சீதாப்பிராட்டிதனை
சோரமாய்க்கானகத்தில் தூக்கிச்செல்வாயோநினை (வீர)
தாடகைமாண்டவிதந் தானேயறிந்துமுளாய்
வாடாமாரீசன்சென்ற மாகதிகேட்டுமுளாய் (வீர)
காரிகைமூக்குதனைக் கண்டுஞ்சுமாவிருந்தாய்
போரிற் கரதூஷணன் போனதுங்கேட்டிருந்தாய் (வீர)
கவந்தன் விராதனொடு கலந்து மடிந்தானடா
அவந்தனை நீக்கிநீயென் னையனடி தொழடா (வீர)

திருச்சினசாரியாம் என்ற வர்ணமெட்டு.

விடு விடு சீதையை வேண்டாமிராவணு கேள்
பொல்லாப்பு வேண்டாமிராவணு கேள்
வல்லாண்மை வேண்டாமிராவணு கேள்
வீம்பு பேசாதே
வீணு யேசாதே
காணக் கூசாதே (விடு)
என்னுயன்சாதே இனி
உன்னைக்காப்பரஞ்சாதே (விடு)
கெடுமதி மேவினுல் கீர்த்திகிலாதடா போம்
உண்டான கீர்த்திகிலாதடா போம்
வாழ்வைக் கொல்லாதே
தாழ்வைப் புல்லாதே
வாது செல்லாதே ராம
பாணம் பொல்லாதே உன்
ஆண்மையவர்முன் செல்லாதே (விடு)

# இராவணன் அனுமாரை வெட்டப் புகுதல்.

மருவே செறித்த என்ற வர்ணமெட்டு.

அடடாஎனக்கு மதியேஉரைக்க
அனுமானனுக்கு மௌனதீரம்
அழிவாலையிட்டு அதன்மேலிருக்கு
மதிகாரமெத்த வலங்காரம்
விடடாமதிப்பை வனவாசமூற்ற
விளையாட்டுமெத்த குரங்கேவுன்
வினையாலிறக்க விதியோசிரத்தை
விரிவாளெடுத்துத் துணிப்பேனே
அனு:-மடையாஉனக்கு எனதானுரைத்து
மதியோஇலைப்பின் னறிவாயே
மரியாதையுற்றுக் களமீதெதிர்த்து
மடிவாயொருத்தன் கணையாலே
படையோடரக்கர் குலமே முடிக்க
படிமேலுதித்தார் பகவானும்
பரனுமெழுத்திப் படியோவிலங்கைப்
பதியேபிழைக்க வழிதேடாய்

## அனுமார் இலங்கையைக்கொளுத்துத

இன்னமுங்காணேனே என்ற மெட்டு.

அக்கினியிட்டேனே லங்கைநகர்
சிக்கிவேகத்தானே வாசிஞல் (அ

திக்கு முக்காடிட உக்கிரமாயனல்
திக்குகளை மூட சனமோட வனமாட மெங்கிலும் (அ

சீருமரக்கரெல் லோருமடிந்திடச்
சேரப்புகையோங்க சிகைவீங்க பகைதாங்க சுற்றிநான் (அக

சண்டியிராவணன் கண்டுவியாகுலங்
கொண்டு மெலிவாகி துயராகி வீணிலேகித் தங்கநான் (அக்

## மங்களம்.

மங்களம்சுப மங்களம்ஜெய மங்களம் நித்ய மங்களம்
மங்களம்சுப மங்களம்ஜெய மங்களம் நித்ய மங்களம்

கங்கைமாநதி தங்குவேணியங் கர்த்தனுருக்கு மங்களம்
மங்கைபார்வதி யம்மைக்குமலர் வாணிக்குஞ் சுபமங்களம்

அத்திமாமுகத் துத்தமர்க்கு மொய் யாரவேலர்க்குமங்களம்
புத்திண்பந்தரு மாயர்மகிழ்திரு பூவைக்குஞ் சுபமங்களம்

முத்தியினிலே காட்டுமெய்த்தவ மோனர்க்கு மாமங்களம்
நித்தியமறி வாளர்க்குஞ்சிந்தை நேசர்க்குஞ் சுபமங்களம்

பூதலத்துறு மாந்தர்க்கும் நல பூபர்க்குஞ் சுபமங்களம்
மீதலத்துறை தேவர்க்குந்தமிழ் வித்வர்க்குஞ்சுப மங்களம்

வேதமோதிடு வேதியர்க்கும்நல் விப்பிரருக்கும் மங்களம்
சாதகத்துரை மேவுஞ்சுப்பைய தாசர்க்குஞ் சுபமங்களம்.

காவடிச்சிந்து முற்றிற்று.

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்கள் [illegible] நவீன நாடக இராமாயணத்தைத் தவறாது வாங்கிப் படியுங்கள் விலை ரூ. 2.

225026.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் திருவருள் பெற்ற
அருணகிரி நாதசுவாமிகளருளிச்செய்த

## திருப்புகழ் பெரிது.

இதில் மதுரம் பழுத்தொழுகுந்தேன் றுளிக்கும் சந்தச்சுவை வாய்ந்து, ...ப்பாருள்ளத்தையும், கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப் ...ரானந்தப் பெருக்கிலாழ்த்தச்செய்யுஞ் சிறப்பு வாய்ந்த பாடல் ... பல பழைய பிரதிகளைவைத்து இதுவரை அச்சிடப்பெறாத ... அரிய பாடல்கள் இப்புத்தகங்களில் சேர்த்துள்ளன.

சந்தக்குழிப்பும் அரும்பதப்பொருளும் அடங்கியுள்ளன.

(642) பாடல்கள் முதற்பாகம் 2—8—0
(611) ,, இரண்டாம் பாகம் 2—8—0

---

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ்க்ஷேத்திர மதுர

## ...பாஸ்கரதாஸவர்களால் இயற்றப் பெற்ற புத்தகங்கள்.

...டிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கக்கூடிய வர்ணமெட்டுகளாலமைக்கப்பெற்ற புதிய பெரிய பக்திரஸ கீர்த்தனங்கள் 0 : 0

டி இரண்டாம் பாகம் அநேக நூதன வர்ணமெட்டுகள் அடங்கி, புதிய பாடல்கள் சேர்ந்தது 0 5 0

| | | | | |
|---|---|---|---|---|
| லலிதாங்கி சரித்திரம் | டி | 0 | 6 | 0 |
| வள்ளியம்மை சரித்திரம் | டி | 0 | 6 | 0 |
| அதிரூப அமராவதி | டி | 0 | 6 | 0 |
| சகுந்தலா | டி | 0 | 6 | |

---

அம்பாசமுத்திரம் வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ
எச். டி. சுப்புசாமி அய்யரவர்களாலியற்றப்பெற்ற

## ஸ்ரீ ராமாயணச்சிந்து,

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி லீலைக்கும்மியும் கூடியது.

மூவடியளந்தோன் சேவடிபோற்றும் பாவடியார்கள் பக்தி... ...காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் வழுத்திய பாடல்கள். பக்திமா... ...மமங்கையரும் பக்தியோடிதனை நித்தம் படித்தால் முத்தியும் பெறுவர். ...த்த காரியம் சித்தியும் பெறுவர் என்பதிலையமில்லை. விலை அணா 3.

---

## மெஸ்மெரிஸம், என்று வழங்கும் வசிய சாஸ்திரம்.

நம் முன்னோர்களான மஹரிஷிகளால் அப்பியாசித்துச் சிறப்...டையப் பெற்ற இப்புத்தகத்திற்கூறிய முறைகளைச்சரிவர அப்பியா...த்து வருவோர்க்கு தேவவசியம், மானிடவசியம், உலகவசியம், ஜனவசியம், தனவசியம், மிருகவசியம், இந்திரஜாலம், மஹேந்திர ஜாலம் முதலிய வித்தைகள் விரைவில் சித்தியாகும். சித்திரப் படங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விலை 1-8-0

முந்துங்கள்! மூத்தமிழ் க்ஷேத்திர முந்து

# மதுர பாஸ்கரதாஸ் அவர்கள்

இயற்றிய, இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த் திலகம்.

கேட்கக் கேட்கத் திகட்டாத பாடல்கள்.

செவிக்கின்பம் பயக்கும் செந்தமிழ்ப் பாடல்கள்.

| | | |
|---|---|---|
| முதல் பாகம் விலை அணா | ... | 0—6—0 |
| இரண்டாம் பாகம் ,, | ... | 0—6—0 |

---

செந்தமிழ் சரபம் விரகாலூர்

மகா-ா-ா-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களால்,

சரித்திரமுழுதும் காவடிச்சிந்து திருப்புகழ் வர்ணமெட்டுகளா

லெகு சுவையாக இயற்றிய பாடல்கள் அடங்கிய,

| | | |
|---|---|---|
| கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 |
| நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 |
| அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 |
| பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் | 0 | 4 |
| இராமாயணத்திருப்புகழ், இலங்காதகனக்காவடிச்சிந்து | 0 | 3 |
| சிதம்பரம் நடராஜர் நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 |
| ..ானசௌந்தரித் திருப்புகழ் காவடிச்சிந்து 2-பாகம் | 0 | 8 |
| ..ல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 |
| ..ண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் | 0 | 4 |
| ..ன்திருமால் முருகன் பக்திரசக் கீர்த்தனை | 0 | 4 |

துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய,

| | | |
|---|---|---|
| ..தத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 |
| ..காண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | [illegible] |
| ஸ்ரீபாகவத குசேல பக்தியானந்தச் சரித்திரத்திருப்புகழ் | 0 | |
| பார்வதி சத்தியவான் சாவித்திரி சரித்திரம் | 0 | |
| வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | |

மகா-ா-ா-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களாலியற்றிய

| | | |
|---|---|---|
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 |
| அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 |

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை